29.08.2025. OS.No.214/2017

சாட்சி : PW 1 குணசேகரன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**1, 2, 3, 4, 7, 9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் உள்ள 1 முதல் 8 பக்கங்களில் சொல்லப்பட்ட அனைத்து விசயங்களையும் நான்தான் வழக்கறிஞர் வசம் கூறினேன் என்று சொன்னால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள 1 முதல் 8 பக்கங்களையும் நான் நன்றாக படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பழைய எஸ்.எஸ்,எல்.சி என்ற படிப்பை நான் படித்துள்ளேன். தச்சக்குடி கிராமத்தில் எங்கள் இனத்தவர்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் என மொத்தம் 75 குடும்பங்கள் உள்ளது என்றால் சரிதான். நான் 1 முதல் 5 வாதிகளான அனைவரும் எங்கள் இனத்தை சேர்ந்தவர்கள் தான் என்றால் சரிதான்,

2. மற்ற ஆதிதிராவிடர்களும் வேறு இனத்தவர்களும் இதில் பார்ட்டியாக இல்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தச்சக்குடி கிராமப் பொதுமக்களின் பிரதிநிதி என்ற முறையில் தாக்கல் செய்துள்ளதாக சொல்வது தவறு என்றும், நாங்கள் எங்கள் தனிப்பட்ட விருப்பத்தின்பேரில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2ம் வாதி பழனிராஜன் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் எந்த நாட்டில் இருந்தார் என்றால் அவர் எந்த நாட்டிலும் இல்லை, எங்கள் ஊரில்தான் இருக்கிறார். 2ம் வாதி பாஸ்போர்ட் வைத்துள்ளாரா என்றால் வைத்திருக்கலாம். 2ம் வாதி வழக்கு தாக்கல் செய்த காலத்தில் ஜப்பானில் இருந்தார் என்றும், அதன் பின்பு அரபு நாடுகளுக்கு சென்று விட்டார் என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல,

3. 2ம் வாதி இங்கு தான் இருந்தார் என்பதை நிருபிக்க அவரது பாஸ்போர்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அதை அவரிடம் தான் கேட்கவேண்டும். 5ம் வாதியான சரவணன் எங்கு உள்ளார் என்றால் 2 வருடங்களுக்கு முன்பாக பெங்களூரில் இருந்ததாக கேள்விபட்டேன், தற்போது எங்கு உள்ளார் என்பது எனக்கு சரியாக தெரியாது. 5ம் வாதி சரவணன் 10 வருடங்களுக்கு முன்பாகவே ஊரை விட்டு வெளியே

சென்றுவிட்டார் என்றும், அவருடைய இருப்பிடம் பற்றி தகவலே இல்லை என்றும் சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தச்சக்குடி கிராமத்தில் காட்டு மாடுகள் விவசாயத்தை அழித்ததால் விவசாயம் பாதிப்படைந்து என்றால் சரியல்ல. கிராம மக்கள் சார்பாக ஊரைச் சுற்றி விவசாயத்தை பாதுகாக்க கற்கால்கள் ஊன்றி கம்பி வேலி அமைக்கவேண்டுமென பேசினார்கள் என்றால் சரிதான். அதற்கு நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான், பொது சொத்தை விற்று கம்பி கால்கள் அமைக்க வேண்டாம் என்று சொன்னோம்.

4. என் நிரூபணவாக்குமூலத்தில் கம்பி வேலிகள் பொதுச்சொத்தை விற்று போடக்குடாது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எங்கள் தச்சக்குடி கிராமம் மற்றும் எங்கள் கிராமத்தில் விளைநிலங்களை சுற்றி சுமார் 5 கி.மி சுற்றளவில் கற்கால்கள் ஊன்றி கம்பிவேலி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கற்கால்கள் போட்டு எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் 7 ஆண்டுகள் இருக்கும். அந்த கற்கால்கள் எந்த பணத்தில் இருந்து எடுத்து செலவு செய்தார்கள் என்றால் ஊரில் உள்ள வரி பணத்தை வைத்து செய்தார்கள். நான் சொல்வது தவறு என்றும், தனியாரிடம் கடன் பெற்று அந்த கற்கால்களை கிராம மக்கள் அமைத்தார்கள் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து நிரூபணவாக்குமூலத்தில் கண்டுள்ளபடிதான் தற்போது உள்ளது என்றால் சரிதான்.

5. நான் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துபார்த்தேன். மேற்படி கிரையப்பத்திரத்தில் கிராம பொதுநலனுக்காக தானாதி வினிமய விக்கிரையங்களுக்கு சர்வசுதந்திர பாத்தியங்களுடன் அனுபவித்து கொள்ளப்படுகிறது என கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிராம மக்களின் வளர்ச்சிக்கு விரோதமாகவும், இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் கிராமத்தார்கள் அனைவரும் ஒன்றுகூடி கிராம மக்களின் ஒப்புதலுடன் சுமார் ரூ.11 லட்சம் செலவு செய்து கற்கால்கள் ஊன்றி பொது மக்களின் பயன்பாட்டிற்கு வைத்துள்ளார்கள் என்றும், அதை நான் பொறுத்துகொள்ளமுடியாமல் பொறாமை உணர்வுடன் கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. எங்கள் தச்சக்குடி கிராமத்திற்கு பாத்தியமான சொத்து சுமார் 200 ஏக்கர் இருக்குமா என்றால் இருக்கும். கிராம நலனுக்காக கிரையம் பெறப்பட்ட சொத்தை கிரையம் கொடுக்ககூடாது என சொல்வதற்கு தனிப்பட்ட நபர்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 3, 4 வாதிகள் சகோதரர்கள் என்றால் சரிதான். சோமு என்பவர் பெங்கலூரில் உள்ளார் என்றால் சரிதான். முருகையா சென்னையில் உள்ளார் என்றால் சரிதான். நாங்கள் 5 பேரும் எங்கள் கிராமத்தை விட்டு வெளியேறி மிக்க வசதி வாய்ப்புடன் வெளியூர்களில் குடியேறி வாழ்ந்து வருகிறோம் என்றும், அதனால் தச்சக்குடி கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கையை பற்றி கவலைப்படாமல் முற்றிலும் பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தச்சக்குடி கிராமத்தில் எனக்கு எந்தவித சொத்தும் இல்லை என்றால் எனக்கு சொத்து உள்ளது. பிராதுப்படி எனக்கு எந்தவிதமான பரிகாரமும் கிடைக்கத்ததக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிராதில் வெளியூரில் உள்ளவர்களின் கையெழுத்தை நான் பொய்யாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.